# மில்க்வைற் செய்தி

# Milk White News


தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஐப்பசி 1979 ★ இதழ் - 46


## சமயம் ஏன்?

நல்வாழ்வு வாழ நெறிமுறைகள் தேவை. குறியும் நெறியும் இல்லாத வாழ்க்கை பயனுள்ளதாகாது. குறிக்கோளில்லாத பிரயாணம் பிரயாணமாகாது. நேரத்தை அறிவதற்கு நிழலை அளக்கும்போது குறிப்பாக ஒன்றை அடையாளமிடுவர். குளத்துக்குக் கரையுண்டு. வாழ்வுக்கும் வரன்முறையொன்று வேண்டும்.

பக்குவப்படாத மனத்தைப் பக்குவப்படுத்தவேண்டும். பண்படாத உள்ளத்தைப் பண்படுத்த வேண்டும். நெறியற்ற வாழ்வை நெறிப்படுத்த வேண்டும். கட்டவிழ்ந்த மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் ஒரே ஒரு சாதனம் உண்டு. அதுவே சமயம்.




சர்வதேச சிறுவர் ஆண்டு விழாவும்
மில்க்வைற் தொழிலதிபரும்.

சமயத்தின் ஒருபகுதி சடங்குகள் கிரியைகள். சடங்குகள் சமயமாகா. சமயத்தின் அடிப்படை தத்துவம் எனப்படும். அது உண்மைப்பொருள் உட்பொருள். தத்துவமின்றிச் சமயமில்லை. தத்துவத்தை நன்ருக விளக்கினுல் சண்டை சச்சரவுகள் உண்டாகா. தத்துவத்தை விளக்குவது கடினமாதலால் அதனை விளக்கவே கதைகள் புராணங்களைச் செய்தார்கள். எனவே கதையிலும் பார்க்கத் தத்துவமே பிரதானமானது.

சமயக்கருத்தை, தத்துவத்தை விளக்கும்போது வீண்கதைகள் பேசலாகாது. தன் கதைகள் சுயசரித்திரங்கள் கூறலாகாது. சமயப் பெரியார்மீது பக்தியுண்டாக்குவதைவிட்டுத் தம்மீது மதிப்புவைக்குமாறு பேசலாகாது. சமயம் பேசுவது ஒரு புனிதப்பணி. சமயம் ஒரு புனிதப்பயணம். அது நம்மை உயர்ந்த இடத்துக்கு இட்டுச் செல்வது. உயர்ந்ததோடு இணைத்து விடுவது. கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர், உறவானவர், உதவியானவர்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

★ உற்சாகத்துக்கு ஒப்பான உறவு இல்லை ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனர்

திருப்புகலூர்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

துன்னைச் சரணென்று தானடைந் தேன்றன் னடியடையப்
புன்னைப் பொழிற்புக லூரண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் தென்வினை கட்டறுத் தேழ்நரகத்
தென்னைக் கிடக்கலொட் டான்சிவ லோகத் திருத்திடுமே.

திருச்சிற்றம்பலம்

புன்னைமரச் சோலையுள்ள திருப்புகலூரில் எழுந்தருளியுள்ள அண்ணலாரின் திருவடியே சரண் என்று அவரடியடைந்தேன். ஏனெனில் அவர் தமியேனைப் பிறப்பறுத்து, அடியேன் வினைக்கட்டறுத்து, சிறியேனை ஏழு நரகத்துக் கிடக்கவிடாது, சிவலோகத்தில் இருத்திடும். இங்ஙனம் பாச விடுவிப்பும் சிவப்பேறு தருவிப்பும் செய்தவர் இவர்.




## புல்லறிவாண்மை

அற்பமான அறிவுடைமை

உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப்படும்.

உயர்ந்தோர் உண்டு என்று சொல்லுகின்ற ஒன்றை இல்லை என்று கூறுபவன் உலகத்தாரால் பேய் என்று கூறப்படுவான்.

## The Exercise of folly

He who denies the existence of what the world beleives in -(he) will be held as an evil spirit that walks the earth. (M. R. R.)

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## சமயம் ஏன்?

உபகரிப்பவர். அவர் உபகரிக்காவிட்டால் உலகில் ஒன்றும் இல்லை. எனவே அவரை அறிந்து அவருக்கு ஒரு நன்றி சொல்லுதல் சமயத்தில் ஒரு படி. கீழான மனத்தை மேலான மனமாக்குவது சமயம். அது ஒரு நெறி. சமயம் ஒன்று எமக்குத் தேவை.

## பனம் விதைகள் தேவை

தென்னிலங்கையிலும் வன்னியிலிருந்தும் அரசாங்கத் திணைக்களங்கள், கல்லூரிகள் பனம் விதைகள் தேவை யென வேண்டுகோள் விடுத்திருப்பதால், எமது ஆதரவாளர்கள் இம்முறை அதிகமாகப் பனம் விதைகள் தந்து உதவுமாறு தாழ்மையாக வேண்டுகிறோம்.

தபாற்பெட்டி 77, க. கனகராசா
யாழ்ப்பாணம். மில்க்வைற் தொழிலதிபர்

## அதிக பயன் தரும் அற்புத தாவரம்

இப்பில் இப்பில் கன்றுகள் தேவையானோர் எம்மிடம் விண்ணப்பித்து வந்து எடுத்துக்கொள்ளலாம்.

— மில்க்வைற்

## ஒக்டோபர் மாத நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 2 | செவ்வாய் | — ஏகாதசி விரதம் |
| 3 | புதன் | — பிரதோஷ விரதம் |
| 4 | வியாழன் | — வல்லிபுரஆழ்வார் தேர் |
| 5 | வெள்ளி | — பூரணை விரதம் |
| 9 | செவ்வாய் | — கார்த்திகை விரதம் |
| 16 | செவ்வாய் | — ஏகாதசி விரதம் |
| 18 | வியாழன் | — பிரதோஷ விரதம் |
| 20 | சனி | அமாவாசை விரதம்<br>தீபாவளி – கேதாரகௌரி விரதம் |
| 21 | ஞாயிறு | — கந்தசஷ்டி விரதாரம்பம் |
| 31 | புதன் | — ஏகாதசி விரதம் |

## மில்க்வைற் செய்தியின் செய்தி

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் மில்க்வைற் செய்தியைக் காலதாமதமின்றி ஒழுங்காகப் பெறுவதற்குச் சுலபமான வழி எங்களுக்கு முத்திரைச் செலவில்லாமல் நீங்களே அதற்கான வழி ஒன்றைக் கடைப்பிடியுங்கள். தயவுசெய்து 1980 தை மாதம் முதல் இந்த ஒழுங்கைச் செய்யுங்கள். தவறினல் நாம் செய்தியை அனுப்புவது சாத்தியமாகாது.

மில்க்வைற், நிர்வாகி
தபால்பெட்டி 77, மில்க்வைற் செய்தி
யாழ்ப்பாணம்.

★ அன்புள்ளம் உடையவன் அருளுக்கு உரியவன் ★



முற்றுடர்

ஔவையார்

அருளியது

என வழங்கும்

## கல்வி ஒழுக்கம்

**73.** மெல்லியரெனினும் வேண்டுவ தெழுத்தே.
கல்வி பெண்களாயினும் விரும்புவதாகும்.

**74.** மேலோர் என்ன வித்தையைக் கற்றறி.
பெரியோர் என்று சொல்லும்படி, நீ வித்தையைக் கற்றறிந்து கொள்.

**75.** மையறு கல்வியார் மாநிலம் ஆள்வார்.
மயக்கம் நீங்கிய கல்வியையுடையார் பெரியபூமியை ஆள்பவராவர்.

**76.** மொழிவ தகார முதலெழுத்தாமே.
சொல்லப்படுவது அகரம் முதலாகிய எழுத்துக்களாம்.

**77.** மோகவிகாரர் முன்னூல் பாரார்.
மயக்கம் பொருந்திய வேறுபட்ட குணமுடையோர் பழைய நூல்களைப் பார்க்க மாட்டார்கள்.

**78.** வஞ்சக மோதார் நெஞ்சுறக் கற்ருேர்.
மனமமையக் கற்ருேர் கபடவார்த்தைகளைப் பேச மாட்டார்.

**79.** வாட்டந் தராது மறவாக் கல்வி.
மறவாத கல்வியுடைமை சோர்வு தரமாட்டாது.

**80.** வித்தை கல்லாதவர் வெறியர் ஆவர்.
கல்வி கற்காதவர் பித்தராவர்.

**81.** வீரியம் பேசார் வித்தை யறிந்தோர்.
வித்தைகளை அறிந்தவர் வீரம் பேசமாட்டார்.

**82.** வெண்பா முதலாய் விளங்க வோது.
வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா முதலான பாவினங்களை நீ விளங்கும்படி ஓதுதல் செய்.

**83.** வையம் எல்லாம் வாழ்த்தவே யோது.
பூமியில் உள்ளார் எல்லாரும் வாழ்த்துதல் செய்ய நீ ஓதுதல் செய்.

**84.** வெளவிப் படிக்க வாழ்வுண்டாமே.
நூல்களை மனதில் ஊன்றிக் கற்க, நித்தியானந்தப் பெருவாழ்வு உண்டாகும்.

— முற்றும் —

---

எங்களுக்கு எங்கள் பிழைகளைக் காணவிருப்பமில்லை. ஆனல், மற்றவர்களிற் பிழை காண்பதில் மகிழ்கிறோம். இப் பழக்கத்தால் அதிகம் துன்பம் உண்டாகிறது.

— மகாத்மா காந்தி

## செப்படிவித்தை — இந்திரசாலம்

### — அஃதாவது ஒன்றினை மற்ருென்ருகக் காட்டுதல் —

செப்படி வித்தைக்காரன் செய்யமுடியாத உருட்டுப் புரட்டுக்களைச் சில உற்பத்தியாளர் செய்து நல்லபொருள்களின் புகழை நாசமாக்குகிருர்கள். தாம் செய்யும் உற்பத்திகளைப் பிறரின் உற்பத்திகள் போலச் சேலையுடுத்துச் சட்டைபோட்டு இதுதான் அது என்று மக்களை ஏமாற்றச் செப்படி வித்தைக்காரனுல் முடியாது. எங்கள் மில்க்வைற் நீலசோப் மேலுறையையும் வேருெரு உற்பத்தியின் உறையையும் உற்றுப்பாருங்கள். எது மயில் எது வான்கோழி என்பது உங்களுக்குத் தெரிந்துவிடும். சுண்ணும்புத் தண்ணியைப் பால் என்று கூறுபவரை என்செய்வது என்பதை நாங்கள் சொல்லாமலே நீங்கள் அறிந்துகொள்ளுங்கள்.

ஒருவரை நெடுக ஏமாற்ற முடியாது!
எல்லாரையும் ஒரே நேரத்தில் ஏமாற்றமுடியாது!
கண்கட்டி வித்தை கொஞ்சநேரம் அவியும் பின்னர்?
கற்கண்டு கற்கண்டுதான் கல்லுக்கல்லுதான்.

---

## மாதர் பகுதி

சுவாமி விவேகானந்தர் தமது இரண்டாவது அமெரிக்கப் பிரயாணத்தின் போது சுவாமி தூரியானந்தரையும் அழைத்துப்போனுர். தூரியானந்தருக்கு அமெரிக்க நாகரிகத்தைப்பற்றித் தெரியாது. அவர் சகோதரி நிவேதித்தாவிடம் மேல்நாட்டு நாகரிகத்தைப்பற்றிக் கொஞ்சம் தமக்குச் சொல்லும்படி கேட்டார். அம்மையார் தம்மிடமிருந்த பேனுக்கத்தியை விரித்து அலகினைத் தம்கையில் பிடித்தவாறு பிடியைச் சுவாமியிடம் நீட்டினுர்.

சுவாமிக்கு எல்லாம் விளங்கிற்று. ஒருவர் மற்றவருக்குத் தொண்டு செய்யும்போதும், உதவி செய்யும்போதும் துன்பங்களைத் தான் சகித்துக்கொண்டு மற்றவருக்குச் சுகத்தைக் கொடுத்தல் வேண்டும். இல்லறமாகிய நல்லறத்திலும் வாழ்க்கைத் துணைநலம் என்கின்ற மனைவி வீட்டுப் பொறுப்பை ஏற்றவள் எல்லாத் துன்பங்களையும் தான் தாங்கிக்கொண்டு கணவன், குழந்தைகள், மாமன் மாமியர் முதலானோருக்கு உதவி செய்தல் வேண்டும். இது இந்து நாகரிகத்தின் மேற்படிப்பு.

---

பொறுமையாவது யாது? பின்வருமாறு சங்கராச்சாரியார் கூறினுர்: "கடற்கரையிலிரு. ஒரு புல் இதழைக் கொண்டு அதன் நீரை ஒவ்வொரு துளியாய் எடு. துளிகளை விட்டு வைப்பதற்கு ஒரு கொள்ளிடமுண்டேயானுல், உன்னிடமும் போதிய பொறுமையும் உண்டேயானுல் சமுத்திரமுமே முற்ருய் வற்றிவிடும்." இவ்வித பொறுமை பூரண பொறுமைக்குக் கிட்டிய பொறுமையாகும்.

— மகாத்மா காந்தி

---

★ தனியுரிமை நாடுபவன் சான்ருேனுவதில்லை ★

# ★ நாவலர் நினைவுகள் ★



கந்தர் என வழங்கிய கந்தப் பிள்ளை என்பார் இராசவாசல் முதலியார் பரமானந்தர் என்பாரின் புதல்வர். இவர் தாயார் பெயர் உலககாத்தை. இவர்பிறந்த ஆண்டு 1766 யாழ்ப்பாணத்துப் பிரபல கல்விமானாய் விளங்கிய சண்முகச் சட்டம்பியாரிடம் கல்விகற்றவர். மெல்லோ என்னும் பாதிரியாரிடம் போத்துக்கேய மொழியையும் ஒல்லாந்த மொழியையும் நன்கு கற்றவர். சல்பேட் என்னும் பறங்கியர் ஒருவரிடம் ஆங்கிலம் கற்றவர். வண்ணார் பண்ணையில் கோபால் செட்டியார் மனையில் வாழ்ந்து வந்த கூழங்கைத் தம்பிரானிடம் இலக்கிய இலங்கணங்களை முறையாகக் கற்றவர்.

யாழ்ப்பாணக் கச்சேரியில் ஆராய்ச்சி என்னும் உத்தியோகம் வகித்தமையால் ஆராய்ச்சி கந்தர் எனப் பொதுவாக வழங்கப்பெற்றவர். திருநெல்வேலியில் வாழ்ந்த வேதவனத்தாரின் மகள் சிவகாமி என்னும் பெண்ணை மணந்து ஆறு ஆண்களையும் ஆறு பெண்களையும் பெற்றவர். ஆண்கள் தியாகர், சின்னத்தம்பி, பூதத்தம்பி, பரமானந்தர், தம்பு, ஆறுமுகம் என்பவராவர். ஆறுமுகம் கடைக்குட்டி. அவர் 1822ஆம் ஆண்டிற் பிறந்தவர்.

கந்தர், கச்சேரி உத்தியோகத்தோடு வைத்தியமும் செய்துவந்தவர். எழுத்துத்துறையில் ஈடும் இணையுமில்லாதவராய் இருபத்தொரு நாடகங்களை எழுதிக் குவித்தவர். இரத்தினவல்லி என்னும் நாடகத்தை எழுதிக்கொண்டிருந்தபோது எழுத்தாணி பிடித்தவாறே மாரடைப்பால் மரணமானவர். இவர் மறைந்த ஆண்டு 1842. இவர் செய்த வேறு நாடகங்கள் சந்திரகாச நாடகம், இராம விலாசம், நல்லைநகர்க் குறவஞ்சி, கண்டி நாடகம், ஏரோது நாடகம், சம் நீக்கிலார் நாடகம் முதலியனவாம். இவர் செய்த இராம விலாசம் என்னும் நாடகத்தில் ஒரு கவி வருமாறு:

தருவளர் வனஞ்சூழ் அயோத்தியம் பதியில்
　தசரத னருள்பெறு ராமன்
தருகவு சிகர்க்காய்த் தம்பிலட் சுமணன்
　தன்னொடுந் தனிவனம் புகுந்து

செருவளர் படைகள் செலுத்துதா டகையைச்
　சிதைத்துயா கமுநிறை வேற்றித்
திகழக லிகைதன் சிலையுரு அகற்றிச்
　சீதையைக் கண்டுவின் முரித்து

மருவளர் மிதிலை மணம்புரிந் தேதம்
　வளநகர்க் கேகுமவ் வழியில்
வரும்பர சிராமன் வலியொடும் வில்லு
　வாங்கியே சென்று வாழ்ந் திருந்த

திருவளர் கதையை விலாசம தாகச்
　செப்பினேன் பிழையிருந் தாலும்
செந்தமிழ்ப் புலவீ ரவைபொறுத் தருள்வீர்
　தேவசா ரித்திர மெனவே.

கந்தரின் முன்னோர் மூத்ததம்பி முதலியார் என்பவர் ஒல்லாந்தர் ஆட்சி ஆரம்பகாலத்துப் பெரிய உத்தியோகத்தர். அவர் மகன் சோதிநாதர். அவர் மகன் இலங்கைகாவலர். அவர் மகன் பரமானந்தர்.

கந்தரின் மூத்தண்ணா தியாகர் நொத்தாரிசு வேலையும் வைத்தியமும் பார்த்தவர். சின்னண்ணா சின்னத்தம்பி உடையார் வேலை பார்த்தவர். நடுவில் பூதத்தம்பி இளமையிலே இறந்துபோனார். ஆசையண்ணா பரமானந்தர் நொத்தாரிசு வேலைபார்த்த பெரும் புலவராவர். தம்பு அண்ணா கச்சேரியில் உத்தியோகம் பார்த்தவர்.

ஆசையண்ணா பரமானந்தர் நல்லைக் கந்தர் அகவல், நல்லைக்கந்தர் கீர்த்தனம் முதலிய பிரபந்தங்களைச் செய்தவர். நல்லூர் விநாயக மூர்த்திச் செட்டியார் செய்த கதிரை யாத்திரை விளக்கம் என்னும் நூலுக்கு இலக்கிய நயம் ததும்பும் சிறப்புப் பாயிரமும் எழுதியுதவியவர்.

முற்றொடர்:

## இலக்கியச் சொல்

(அ. கு.)


| | | | |
|---|---|---|---|
| 146. | இதம் | — | நன்மை |
| 147. | இதயம் | — | மநம் |
| 148. | இந்தனம் | — | விறகு |
| 149. | இந்திரை | — | இலக்குமி, இந்திராணி |
| 150. | இந்து | — | சந்திரன் |
| 151. | இந்துளம் | — | கடப்பமரம் |
| 152. | இநன் | — | சூரியன் |
| 153. | இப்பி | — | சிப்பி |
| 154. | இம்பர் | — | இவ்விடம் |
| 155. | இம்பி | — | அற்பம் |
| 156. | இமம் | — | பனி |
| 157. | இமிசை | — | தீங்கு |
| 158. | இமில் | — | எருத்தின் முரிப்பு |
| 159. | இமையவர் | — | தேவர் |
| 160. | இயக்கம் | — | அசைதல் |
| 161. | இயம் | — | வாத்தியம் |
| 162. | இயமாநன் | — | ஆன்மா |
| 163. | இயல்பு | — | குணம் |
| 164. | இயற்றல் | — | செய்தல் |
| 165. | இயைபு | — | தொடர்பு |

— தொடரும்

கறுப்பான பொருட்களை அசுத்தமானவையென்றும் வெள்ளையானவற்றைச் சுத்தமானவையென்றும் எண்ணுகிறோம்.
— மகாத்மா காந்தி

★ இறைவனை வணங்குவதற்குப் பேச்சுக்கு இடமில்லை ★

முற்றொடர்:



## சோல்பரி கண்ட யாழ்நகர் சுவாமி

வேதாந்தத்தில் ஆன்மா ஒன்றே ஒன்றுதான். அது சர்வலோகப் புனிதஆவி. தனிப்பட்ட உயிர்களான சீவாத்மாக்கள் உட்பட்டன யாவும் மாயை. ஆனால் சைவ சித்தாந்தத்தின் வண்ணம் பரமாத்மா என்னும் பரமசிவன் மூலமாய முதற்பொருள். ஏனைய சீவாத்மாக்கள் யாவும் தனிநிலையாக வெளியே நிலவுபவையாகும்.

விளக்கமுடியாத ஒன்றை விளக்க முயலும்போது ஒவ்வொரு சமயமும் அறிவுகடந்த மெய்மையைக் கூற முயலுகிறது. வேதாந்தம் ஒரே ஒரு உண்மைப் பொருள் உள்ளது. அது ஆத்மா என்றும் பிரமம் என்றும் வழங்கும் எனக்கூறும். அது புலனுணர்வேயன்றிப் புறந்தெரியும் பொருளல்ல. அதைத் தவிர்ந்த வேறு எதுவும் இல்லையாதலால் தனிப்பட்டனவாய உயிர்களும் அதுவேயாகும். ஆகவேதான் தத்துவம் அசி, நீ அதுவாயிருக்கிறாய். இதனை உணர்தலேயன்றி அறியமுடியாது. உயிர்கள் அதனை என்னவென்று உணரும்போது, அகம் பிரஸ்மாமி, நான் பிரமமாய் இருக்கிறேன் என்னும் அவ்வேளை உடம்பு உறுப்புகளின் தொழில்பாடு, புவனபோகங்கள் யாவும் புறந்தெரியமாட்டா. அது புனிதமாய்ப் புலனுணர்ச்சியாய் இருக்கும். உண்மையில் மாயை நிலைபேறுடையதல்ல. அது முன்னர் என்றும் இருந்ததை, இனி என்றும் இருப்பதை மறைத்து நின்றது. என்றும் உள்ளது உண்மை. அது என்றும் மாறா இயல்புள்ளது. முழு உலகமும் மருட்சி தருகின்ற பொய்த்தோற்றம். அது நிலவுவதும் இதனை உணருவதற்கேயாம். மாயையால் உண்டானவை எவையும் தனிப்பட்ட உயிருக்கு நிலையாக இல்லையாயினும் பொய்த்தோற்றம் ஒன்றே நிலவுகிறது.

மாயை என்பது உண்மை என்றும், அது பொய் என்றும் கூறுமிடத்திலேதான் வேதாந்தம் அறிவு நிலைகடந்த சமய உண்மையைக் கூறுகிறது. உண்மையில் தனிப்பட்ட உயிர்களும் உண்மையானவையல்ல. ஏனெனில், ஒப்பற்ற உயர்ந்த அந்த ஒன்றைவிட வேறெதுவும் நிலையானதல்ல ஆனால் உயிர் தனக்குத் தனிப்பட்ட நிலையென ஒன்றிருப்பதாகக் கருதும்வரை உலகம் உண்மைப்பொருளே. ஆனால் உயிரானது பிரமத்தோடு ஐக்கியப்பட்டுவிட்டதை உணரும்போது உலகம் நிலையானதாகத் தோன்றுவதில்லை. இந்த ஒப்பற்ற உண்மைப்பொருளை, பிரமம் என்றும் மேலானது என்றும், நான் என்றும் கூறுவதில் வேறுபாடு எதுவும் இல்லை. ஏனெனில் உள்ளது ஒன்றே ஒன்றுதான்.

— தொடரும்

சர்வதேச சிறுவர் ஆண்டு

## படிக்கும் பழக்கம்

இளமைப் பருவத்தில் நாம் படிப்பன யாவும் எமது பிற்காலத்துக்கு வெகுவாக உதவும் என்பதனாலேயே இளமையிற் கல்வி சிலையில் எழுத்தென்றனர். நாம் படிக்கும் நூல்கள் நம்மை உருவாக்குகின்றன. அறிவு வளர்ச்சிக்கான சாதனங்கள் பலவாகவுள்ளன. பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் எல்லாம் அறிவை வளர்த்தாலும் நூல்கள்போல் மிகவும் உபயோகமுள்ளது வேறேதுவுமில்லை நல்ல புத்தகத்தில் ஈடுபட்டிருக்கும்போது நாம் நம்மையே மறந்துவிடுகிறோம். நாம் தனிமையாய் இருப்பதையும் மறந்துவிடுகிறோம். உலகப் புகழ்பெற்ற பெரியவர்கள் பலரை உருவாக்கிய சாதனம் புத்தகங்களே என்பதை அவர்களின் வரலாறுகள் தெளிவாகக் கூறுகின்றன.

வெள்ளைப் புடைவையில் சாயம் பதிவதுபோல நம் மனதில் நல்ல நூல்களின் கருத்துக்கள் பதிகின்றன. நம் மன நலத்தை அவை வளர்க்கின்றன. மனம் விலாசமடைவதற்கும் எதனையும் கூர்ந்த மதிநுட்பத்தோடு நோக்குவதற்கும் புத்தக அறிவு நமக்குப் பயன்படுகின்றன. நல்ல நூல்கள் நம்மை வெகுவாக உயர்த்திவிடுகின்றன. நம் உள்ளம் நிறைவுபெறுவதற்கு நூல்களே சாதனமாகும். உள்ளநிறைவால் உண்டாகும் ஆனந்தத்துக்கு நிகர் வேறெதுவுமே இல்லை.

காகிதத்தில் கறுப்புமை பூசப்பட்டன யாவும் புத்தகங்களல்ல. பெரியவர்களின் சிந்தனையில் உருவான கருத்துக்கள் நிறைந்த பெட்டகங்களே புத்தகங்கள். நல்ல நூல்கள் என்றும் அழியாதவையாகும். அவற்றுக்குக் கால தேசம் என்ற பகுப்புகள் கிடையா. அவை எத்தேசத்தவருக்கும் என்றென்றைக்கும் புதிதாகவே நிலவுவன. எத்தனைதரம் படித்தாலும் ஒவ்வொரு முறையும் புதுப் புதுக் கருத்துக்கள் கொழிப்பனவே. நவில் தொறும் நூல் நயம் தருவன. பழகப் பழகப் மண்புடையாளர் தொடர்பு இனிப்பது போலப் படிக்கப் படிக்கச் சுவைக்கும் நூல்களும் உண்டு. பலகாற் பயின்றாலும் தெவிட்டாத நூல்களும் உண்டு

நாம் மனக்குழப்பம் உற்றிருக்கும்போது மெதுவாக ஒரு நூலை படிக்கத் தொடங்கவே குழப்பமெல்லாம்போய் நிம்மதி உண்டாகிறது. உடல் நலமுண்டாகிறது. மலர்ச்சி பிறக்கிறது. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்.

ஒரு கருமத்தைச் செய்து ஒப்பேற்றுவதற்கு மேற்கொள்ளும் வழிவகைகளைப்பற்றி யாம் கவனமாயிருந்தால் அதன் முடிவும் தன்னைத்தானே கவனிக்கும். இதையே வழிவகைகளுக்கும் முடிவுக்கும் வித்தியாசமில்லையென இன்னொரு வகையிற் கூறலாம்.

— மகாத்மா காந்தி

★ அன்பைப்போல அதிகாரம் ஆதிக்கம் செலுத்தாது ★

முற்றொடர் :



# சுவாமி விவேகானந்தர்

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆற்றிய விரிவுரை

இந்திய தத்துவங்கள் யாவும் வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்டவை. அன்றி இன்றைய சமயங்களின் கோட்பாடுகளையும் ஊன்றிப்பார்த்தால் அவை உபநிடதங்களில் உள்ளன என்பது தெளிவாகும். இத்தகைய உபநிடதங்கள் எங்கள் இனத்தவரிடம் ஊறியிருப்பதை இன்றும் அறியலாம். உபநிடதச் சிந்தனைகள் யாவும் ஆன்மீகமாகவும் தத்துவமாகவும் இன்று எம் நாட்டவர் எல்லோருடைய வழிபாட்டு முறைகளிலும் இல்லங்கள் தோறும் ஒளிவீசுகின்றன. இன்று வழிபாட்டில் இடம் பெறும் குறிகளும் அடையாளங்களும் யாவும் வேதாந்தத்திலுள்ளனவாகும்.

வேதாந்தத்தை அடுத்துள்ளவை ஸ்மிருதிகளாகும். ஸ்மிருதிகளும் முனிவர்களின் வாக்கேயாயினும் அவை யாவும் வேதாந்தத்தை அடியொற்றி எழுந்தனவாகும். ஸ்மிருதிகள் எவையும் வேதாந்தம் போலப் பிரமாணங்களாக முடிந்தமுல ஆணையுரிமையாக நிலவுவனவல்ல. எனவே வேதாந்தத்துக்கு மாறுபாடான ஸ்மிருதிகள் எவையும் தள்ளப்பாலனவாகும். அவை ஆணையுரிமை அற்றனவாகும். இந்த ஸ்மிருதிகள் தாமும் காலத்துக்குக் காலம் வெவ்வேறாக அமைந்துள்ளன. இன்னஇன்ன ஸ்மிருதி சத்திய யுகத்திலும், இன்னஇன்ன ஸ்மிருதி திரேதா யுகத்திலும், இன்னஇன்ன ஸ்மிருதி துவாபர யுகத்திலும் இன்னவை கலியுகத்திலும் என்று வரையறை செய்யப்பட்டதும் உண்டு. எனவே கால தேச வர்த்தமானத்தைக் கொண்டும் சமூகநிலைமை தேவைகளைக்கொண்டும் ஸ்மிருதிகள் வேறுபட்டு வந்துள்ளன எனலாம். ஆனால் நான் வற்புறுத்தி உங்களிடம் விஷேடமாகக் கூற விரும்புவது என்னவென்றால் வேதாந்தம் என்பது என்றும் மாறா இயல்புள்ளது என்பதாகும். வேதாந்தத்தின் கோட்பாடுகள் இயற்கையிலும் மனிதனிலும் அமைந்த நிலைபேறுடைய பிரமாணங்களால் அமைந்தனவாகும். அவை என்றும் மாறாவியல்பிலமைந்த வீறுடையவை. ஆன்ம முன்னேற்றம் அது சுவர்க்கத்தை அடைவது என்பனவாதிய கோட்பாடு என்றும் மாறுவதில்லை. அவை இன்று நிலவும் பான்மையில் இனிமேல் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் நிலவும். ஆனால் சமய அநுட்டானங்கள் சம்பிரதாயங்கள் சடங்குகள் என்பன காலந்தோறும் மாற்றமடையலாம். எமது உணவு விஷயத்திலும் ஒரு நாள் உண்ணும் உணவு வேறொரு வேளையில் உண்ணத்தகாதது எனத் தவிர்க்கப்படலாம். இது காலநிலை உடல்நிலை என்பன சம்பந்தமாக உண்டாகும் நியதியாகலாம். ஆனால் சமயக்கோட்பாடுகள் சநாதனமானவை நிலைபேறுடையவை என்றும் மாறாவியல்புள்ளவை என்பதை நாம் நன்கறிதல் வேண்டும்.

இனிப் பஞ்சலட்சணம் எனப்படும் புராணங்கள் உள்ளன. அவை வேதவாக்கியப் பொருளை வலியுறுத்தி முன்னர் இன்ன காலத்தில் மக்கள் மநுக்கள் இன்னவாறு வாழ்ந்தார்கள் இன்ன நடந்தன என்பனவாதியவற்றைக் கூறுவன. அன்றி உலகத்தின் தோற்றம், நிலைபேறு தர்மத்தின் இயல்பு என்பனபற்றியும் புராணங்கள் கூறுகின்றன. வேதங்கள் மிகவும் இறுக்கமான மொழி நடையில் எழுந்தனவாதலால் அவற்றை எல்லோரும் எளிதில் உணர்ந்துகொள்ள முடியாமையால், புராணங்கள் அவற்றின் செம்பொருளை எளிய நடையில் எடுத்தியம்புகின்றன. பொது மக்கள் ஆழ்ந்த தத்துவக் கருத்தை எளிதில் விளங்கிக்கொள்ளமாட்டார்களாதலால் புராணங்கள் கதைகள் வாயிலாக அவற்றை அவர்களுக்கு எளிதிற் புகட்டுகின்றன.

இனி தந்திரங்கள் என்னும் நூற்றொகுதிகளும் உள்ளன. தந்திரங்களும் சில இடங்களிற் புராணங்களை ஒத்துள்ளனவாயினும் அவை சில இடங்களில் கர்மகாண்டப் பகுதியில் சில பழைய விதிகளை மாற்றியமைக்கவும் முயல்கின்றன. இவையாவும் இந்து சமயத்தவர்களின் புனிதமான பழைய நூல்களாகும். இங்ஙனம் பெருந்திரளாகவுள்ள இப் பழைய நூல்கள் யாவும் என்று எக்காலத்தில் எழுந்தன என்று எவருக்குமே தெரியாது. இவை பெருமை வாய்ந்த முனிவர்கள் அதி மனிதர்களின் பெரும் பொழுதையும் ஆற்றலையும் சிந்தனையையும் கொண்டு எழுந்தவையாகும்.

— தொடரும்

---


முற்றொடர்:

## வழக்கிலுள்ள வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| சுவர்ணம் | — | பொன் |
| சுவஸ்தம் | — | குணம் |
| சுவர்க்கம் | — | வீடு |
| சுவாசம் | — | மூச்சு |
| சுவாமி | — | அடிகள் |
| சுவாலை | — | சுடர் |
| சுவீகாரம் | — | தனதாக்குதல் |
| சுவேச்சை | — | தன் விருப்பம் |
| சூக்குமசரீரம் | — | நுண்ணுடல் |
| சூசனம் | — | சுருக்கம் |
| சூதகம் | — | தீட்டு |
| சூரணம் | — | தூள் |
| சூரன் | — | வீரன் |
| சூரியன் | — | ஞாயிறு, பகலவன் |
| சூலம் | — | வேல் |
| சூனியவரதம் | — | இல் பொருள் வழக்கு |
| சூன்யம் | — | இல் பொருள் |

தன் எண்ணங்களால் உருப்பெற்ற ஓர் உருவமே மனிதன். — மகாத்மா காந்தி

★ தூயவனுக்குத் துணை தானே வந்தணையும் ★



## பஞ்ச தந்திரம்

பயனைத் தேடியலையும் மக்கள் பேராசையால் அபாயங்களைக் கவனிப்பதில்லை.

நல்ல மலர்களை விட்டு யானையின் மதநீரை நாடித் திரியும் வண்டுகள் போல மனிதரும் நல்லதை விட்டுத் தீயதை நாடுவதுண்டு.

பழங்கள் நிறைவதால் மரக்கிளைகள் தாழ்கின்றன, கதிர்கள் நிறைவதால் நெற்பயிர்கள் தாழ்கின்றன, கனத்த தோகையிருப்பதால் மயில் மந்தமாக நடக்கிறது. அடியார்கள் பக்தி மிகுதியால் தாழ்ந்து கொள்ளுகிருர்கள்.

குதிரை வேகமாக ஓடுவதால் அதனிடம் பாரஞ் சுமத்துகிருர்கள். நல்லவனின் நற்குணத்தால் அவனைத் துன்பப்படுத்துகிருர்கள்: பணக்காரன் நல்லவனுனல் பந்துக்கள் அவனைப் பிடுங்கித் தின்கிருர்கள்.

கூண்டில் கிடக்கும் சிங்கம், அங்குசத்தால் அடங்கிய யானை, மந்திரத்தால் கட்டுண்ட பாம்பு, ஆதரவில்லாத அறிஞன், அதிட்டமில்லாத வீரன் காலதேவதையின் ஆட்டத்தில் அடக்கம்தானே.

கோதானம், பூமிதானம், அன்னதானம் என்றெல்லாம் பெரியவர்கள் சொல்லட்டும். ஆதரவில்லாதவருக்கு அபயதானம் அளிப்பதே மேலானது.

உயிர்போகிற நிலைமை ஏற்பட்டாலும் சாப்பிடத் தகாததை அறிவாளி சாப்பிடுவதில்லை.

எஜமானின் காரியத்தில் வேலைக்காரர் தமது தகுதியைக் காட்டினுல் அவர்களுக்குப் பூமியில் புகழும், சுவர்க்கத்தில் அமரநிலையும் உண்டாகும்.

தன் இனத்தாருக்கு மனத்தாலும் தீங்குநினைத்தாலும் இரு உலகங்களிலும் இடங்கிடையாது.

மெத்தப்படித்தவர்களிற் கூடப் பலர் அயோக்கியர்களாய் இருக்கிருர்கள்.

தந்திரசாலியின் சொல்லுக்குக் காது கொடுத்தால் மிருதுவான மனமும் மாறிவிடுகிறது.

சுவர்க்கை விரும்புகிறவர்கள் யாகமும், தவமும், தானமும் செய்கிருர்கள். ஆனுல் போர்க்களத்தில் உயிர் விடுபவன் மேலான வீரசுவர்க்கத்தை அடைந்துவிடுகிருன்.

முற்றொடர்:

## தொகையகராதி

### நான்கு

**அரசின் சிறப்பு**

| | |
|---|---|
| கொடை | செங்கோல்முறை |
| அருளுடைமை | குடிகளைப் பாதுகாத்தல் |

**அரண்**

| | |
|---|---|
| மலை | மதில் |
| காடு | கடல் |

**அருவ வடிவம்**

| | |
|---|---|
| சிவம் | நாதம் |
| சத்தி | விந்து |

**அவத்தா தானம்**

| | |
|---|---|
| கண் | இதயம் |
| கழுத்து | உச்சி |

**அவலம்**

| | |
|---|---|
| இளிவு | அசைதல் |
| இழவு | வறுமை |

**அவாந்தர திசை**

| | |
|---|---|
| தென் கிழக்கு | வட மேற்கு |
| தென் மேற்கு | வட கிழக்கு |

**அளவு**

| | |
|---|---|
| எண்ணல் | முகத்தல் |
| எடுத்தல் | நீட்டல் |

— தொடரும்

## சிறந்த குரு

சிரத்தையோடு தினமும் தெய்வத்துக்கு எவர் திருத் தொண்டு செய்கின்றுரோ; செருக்கு, சினம், வேட்கை ஆகியவை சிறிதும் இல்லாமல் எவர் வாழ்கின்றுரோ, பகவானின் சொரூபத்தை உணர்ந்தவர் எவரோ அவரே சிறந்த குரு.


— ஸ்ரீ வல்லபாசாரியார்

## திருப்புகலூரான்

திருப்புகலூரில் எழுந்தருளியுள்ள பெருமான் புகழ் பேசிற் பெரிது. அவர் பொன்மேனியர், பெண்ணேர் பாகத்தர், பொன்போன்ற சடையினர், கொன்றை மாலை சூடியவர், பெருமைபெற்ற தேவர்கள் தேடும் ஞானந்த மருந்து. திருவலஞ் சுழியில் எழுந்தருளுபவர், திருவோணத்தானுன திருமாலும் தாமரையோனுய பிரமனும் காணத்தேடியும் காணப் பெருதவர், இருபது கரங்களையுடைய இராவணனின் வலியைத் தொலைத்தவர், அடியவர்க்காகத் தமது திருமேனியைச் சாய்த்து வளைத்து நின்ற கோணப்பிரான்.

★ மனிதனுக்குத் துணையாய் இருப்பது தர்மம் ஒன்றே ★

முற்ருெடர்:



# சூரிய நமஸ்காரம்

பாரதியார் பாடிய

## சூரிய தரிசனமும் சூரிய துதியும்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் சூரியனைக் குறித்துச் சூரிய தரிசனமும் சூரிய துதியும் பாடியுள்ளார். தமிழ்ச் சுவையும் பக்தி நயமும் ததும்பும் அவர் பாடல்களுள் மாதிரிக்காக இரண்டொன்றைப் படித்து மகிழ்வோம்.

### சூரிய தரிசனம்

சுருதி யின்கண் முனிவரும் பின்னே
தூமொ ழிப்புல வோர்பலர் தாமும்
பெரிது நின்றன் பெருமை யென்றேத்தும்
பெற்றி கண்டுனை வாழ்த்திட வந்தேன்
பரிதி யேபொருள் யாவிற்கு முதலே
பானுவே பொன்செய் பேரொளித் திரளே
கருதி நின்னை வணங்கிட வந்தேன்
கதிர்கொள் வான்முகம் காட்டுதி சற்றே.

வேதம் பாடிய சோதியைக் கண்டு
வேள்விப் பாடல்கள் பாடுதற் குற்றேன்;
நாத வார்கட லின்ஒலி யோடு
நற்ற மிழ்ச்சொ லிசையுஞ் சேர்ப்பேன்;
காத மாயிர மோர்கணத் துள்ளே
கடுகியோடும் கதிரினம் பாடி
ஆதவா, நினை வாழ்த்திட வந்தேன்
அணி கொள் வாண்முகம் காட்டுதி சற்றே.

### சூரிய துதி

கடலின் மீது கதிர்களை வீசிக்
கடுகி வான்மிசை ஏறுதி யையா,
படரும் வானொலி யின்பத்தைக் கண்டு
பாட்டுப் பாடி மகிழ்வன புட்கள்
உடல் பரந்த கடலுந் தனுள்ளே
ஒவ் வோர் நுண் டுளியும் விழியாகச்
சுடரு நின்றன் வடிவையுட் கொண்டே
சுருதி பாடிப் புகழ்கின்ற திங்கே.

என்ற னுள்ளங் கடலினைப் போலே
எந்த நேரமு நின்னடிக் கீழே
நின்று தன் னகத் தொவ்வோ ரணுவும்
நின்றன் ஜோதி நிறைந்தது வாகி
நன்று வாழ்ந்திடச் செய்குவை யையா,
ஞாயிற்றின்க ணொளி தருந் தேவா!
மன்று வானிடைக் கொண்டுல கெல்லாம்
வாழ நோக்கிடும் வள்ளிய தேவா!

காதல் கொண்டனை போலு மண் மீதே,
கண் பிறழ்வின்றி நோக்கு கின்ருயே!
மாதர்ப் பூமியு நின் மிசைக் காதல்
மண்டினு னிதி லைய மொன் றில்லை;
சோதி கண்டு முகத்தி லிவட்கே
தோன்று கின்ற புதுநகை யென்னே!
ஆதித் தாய் தந்தை நீவி ருமக்கே
ஆயிரந் தரம் அஞ்சலி செய்வேன்.



ஏழாலை ஸ்ரீ பாதாள ஞானவைரவலர் கோயில் மணிக்கூட்டுக் கோபுர கும்பாபிஷேகத்தின்போது பிரதான கும்பம் வீதி வலம் வரும்போது மில்க்வைற் தொழிலதிபரும் கலந்து சிறப்பிக்கும் காட்சி.

★ பிறர்மீது பழியைப் போடுபவன் பாமரன் ★

# இல்லற வாழ்வில் இன்பமடையவும் திருமணக் கோட்பாடு சிறக்கவும் சில விதிகள், ஆலோசனைகள்

ஒருவனும் ஒருத்தியும் திருமணஞ் செய்துகொண்ட அன்றே ஒருவர் ஆகின்றனர். ஒருவரில் இருவரும் உறைகின்றனர். காகத்தின் இரண்டு விழிகளுக்கும் ஒரு மணி போலத் தம்பதிகள் ஆகத்துக்கு ஓர் உயிர் என்று மாணிக்கவாசக சுவாமிகள் அருளியுள்ளார். ஒருவரின் பாதியுடல் மற்றவரின் பாதி என்று சேக்ஸ்பியர் கூறியுள்ளார். எனவே நீவிரிருவரும் நெடியவிவ்வுலகில் நீரும் பாலும் போலக் கலந்து மணியும் ஒளியும்போல மருவி ஒருவரை ஒருவர் மதித்துப் பேணி இன்புற்று வாழுதல் வேண்டும்.

உங்களுக்குள் கோபம் வரும்போது இருவரும் ஒரே நேரத்தில் கோபங்கொண்டு ஆளை ஆள் பாயாதீர்கள். கடந்தகாலத்தில் ஏதாவது குறைகள் இருந்தால் அவற்றை மீண்டும் சுட்டிக்காட்டாதீர்கள் ஒருவர் செய்யும் தவறுகளை மற்றவர் மன்னித்து விடுங்கள். பெண்கள் பொறுமையின் சொரூபம் என்று புலவர்கள் போற்றுகிறுர்கள். அந்தப் பெண்மையை நீங்கள் மாசுபடுத்தாதீர்கள். மன்னித்து விடுதல் மனிதனின் பூஷணம் என்று முனிவர்கள் அருளியுள்ளார்கள். அந்த மனிதாபிமானத்தை நீங்கள் மாசுபடுத்தாதீர்கள்.

ஒருவரோடு ஒருவர் மனந்திறந்து பேசுங்கள். மூன்றும் ஆள் உங்கள் சொந்தவிடயங்களில் தலையிட விடாதீர்கள். ஒருவர் சொல்வதை மற்றவர் பொறுமையாய்க் கேளுங்கள். ஒருவருக்கொருவர் அன்புகாட்டிச் சுகமளியுங்கள். ஆண்மையும் பெண்மையும் மதிப்புள்ளனவாதலால் ஒருவரையொருவர் மதியுங்கள். குடும்பம் என்ற கட்டுக்கோப்பைக் குலைக்காதீர்கள். இருவரிடத்தும் குற்றம் இல்லை என்று இருவரும் காணுமாறு நடவுங்கள். குற்றம் இருக்கிறது என்றால் Both are right and both are wrong, much can be said on both sides எனவரும். உங்களைப்பற்றி அதிகஞ் சொல்ல இடமளிக்காதீர்கள். பிள்ளைகளின் பெரு வாழ்வுக்காக உங்கள் பொதுவான வாழ்வும் உபகரிப்பும் தேவை. ஆளை ஆள் பகைத்தால் பிள்ளைகள் தவிப்பதோடு அயலிடத்தே மேயப் போக முயல்வார்கள். எனவே அவசரத்தில் திருமணஞ் செய்தாலும் ஆறுதலாகப் பேசித் திருமணஞ் செய்தாலும் தம்பதிகள் தம்பதிகளே. தாம்பத்திய வாழ்வு தழைக்கவேண்டும். தலைமுறை சிறக்க வேண்டும் சமூகம் வளரவேண்டும். விளங்குகிறதுதானே?

# Voice of Mahathma

**(SOCIAL SINS)**

1. Politics without Principles
2. Wealth without Work
3. Commerce without Morality
4. Education without Character
5. Pleasure without Conscience
6. Scienee without Humanity
7. Worship without Sacrifice

**T. R. Venkataraman**, *Advocate*, *Tenkasi*.

# அருள்விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்

அன்பில் நிலைத்திருப்பவன் அச்சத்தை அறியான்.

நாவை அடக்குபவன் நல்வாழ்வு வாழ்பவன்.

எண்ணம் எப்படியோ வாழ்வும் அப்படியே ஆகிறது.

பயன்படுவதை அறிந்திருப்பவனே அறிவாளி.

தளராத நெஞ்சமே நாட்டுக்கு நல்ல அரண்.

வசையையும் குறையையும் அமைதியாக ஏற்பவன் பெரியவன்.

கீர்த்தியுள்ளவன்புகழ் தானுகவே நாலுபக்கமும் பரவும்.

தந்தையை இகழ்பவன் தன்னையே இகழ்பவனுகிறுன்.

ஆசையை வென்றவனே உலகில் பெரிய பணக்காரன்.

மௌனமுற்றிருப்பதே தெய்வத்திள் பாஷை.

விவேகம் இல்லாதவன் குருடன் போன்றவன்.

## மநுதர்மம்

யமம் என்பது நல்லொழுக்கத் தொகுதி. இவற்றைச் சிறிதாயினும் கைவிடலாகாது. பிரமசரியம், தயை, பொறுமை, தியானம், சத்தியம், நேர்மை, அஹிம்சை, திருடாமை, மகிழ்ச்சி, புலனடக்கம்.

நியமம் என்பது செய்யவேண்டிய சமயச் சடங்குகள் ஸ்நானம், மௌனம், உபவாசம், தேவபூசை, வேதம் ஓதுதல், கலவிதவிர்த்தல், குருபணிவிடை, பரிசுத்தம், சினமின்மை, எச்சரிக்கை.

## —★ அதிகார நந்தி ★—

சில சிவாலயங்களில் அதிகார நந்தியின் திருவுருவம் உண்டு. சிவபெருமானை உபாசனை செய்வதில் நந்தியெம்பெருமானை மிஞ்சியவர் மூவுலகிலும் இல்லை என்பது முதுமொழி. எனவேதான் அவரையும் வழிபடுகின்ற முறை ஏற்பட்டுள்ளது.

நந்தி தேவர் மோட்சசித்தியையும், உலகக்ஷேமத்தையும் கருதி வழிபாடு செய்தவர். அவர் இறைவனைக் கண்ணுற் காணவேண்டும் என்று கடுந்தவஞ்செய்தார். இறைவன் அவர் முன் தோன்றியருளிய போது, தாம் எப்பொழுதும் இறைதியானம் மறவாமல் இருத்தல்வேண்டும் என்னும் வரத்தைக் கேட்டுப்பெற்றுர்.

நந்தியெம்பெருமான் செய்த பெருந்தவத்தால் அவர் இறைவனுக்கு வாகனமாகவும், வாயில் காப்போராகவும், திருக்குமாரராகவும் பெரும் பேறுபெற்றுர். கைலாய மலைக்கு நந்திதேவர் அலங்காரமாய்த் திருநந்திதேவர் என்னும் திருநாமம் பெற்றுர். அவர் இறைவனும் இறைவியும் எழுந்தருளியிருக்கும் இடத்தில் பரமாணுவாய் இருப்பார். இறைவனின் முக்கண்ணின் நோக்குக்கு எதிரில் நிற்கக்கூடிய ஆற்றல் இறைவனுல் அருளப் பெற்றவர் அவர்.

★ பணிபுரிபவன் மனது பாழ்படுவதில்லை ★



## — நாவலரும் — திருக்கோணமலையும்

ஆறுமுகநாவலர் அவர்களைத் திருக்கோணமலை வாசிகள் வெகுவாக மதித்தவர்கள். நாவலர் வழியில் ஒழுகியவர்களுள் தி. க. கனகசுந்தரப்பிள்ளையும் அவர் சகோதரரும் புகழ்பெற்றவர்கள். கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் சென்னையில் நல்ல நிலையில் வாழ்ந்ததோடு கல்விப்பணியில் பெருஞ்சேவை செய்தவர். கனகசுந்தரப்பிள்ளையின் பெயருக்கு முன்னுள்ள தி திருக்கோணமலையைக் குறிப்பதாகும்.

நாவலர் மறைந்த நூற்றாண்டு விழாக் கொண்டாடும் மகாத்துமாக்கள் மகான்கள் திருக்கோணமலையை மறந்துவிடலாகாது. இன்றைய திருச்கோணமலை மிகு சைவத் துறையில் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றபோதிலும் அங்கே அணையா விளக்குத்தேவை.

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர்கள் நற்பணி புரிந்து வருகின்றார்கள். தம்பலகமம், கந்தளாய், ஆலங்கேணி, ஈச்சந்தீவு, சுங்கான்குழி, கட்டைபறிச்சான், கிண்ணியா, நிலாவெளி, கும்புறுப்பிட்டி, குச்சவெளி, பன்குளம், பள்ளிக்குடியிருப்பு, மூதூர், சேனையூர், சம்பூர், சாம்பல்தீவு, கிளிவெட்டி, மல்லிகைத்தீவு முதலிய இன்னும் பல இடங்கள் தமிழும் சைவமும் மணக்கும் வகையில் ஆர்வமுள்ள இளைஞர்கள் தொண்டுபுரிகின்றார்கள். அவர்களையும் ஆறுமுகநாவலர் அவர்களின் பேரால் அரவணைத்துக் கொள்ளுதல் நூற்றாண்டு விழாப் பொலிவுக்கு ஒளியூட்டுவதாகும்.

## கண்டதும் ~~~~~~~~~~ கேட்டதும்

92. கடமையை நிறைவேற்றுவதற்கு அன்பும் தைரியமும் சாதகமாயுள்ளன.

93. புத்தியுள்ளவனின் வாய் அவன் இதயத்தில் இருக்கிறது. மடையனின் இருதயம் அவன் வாயில் இருக்கிறது.

94. நாம் விரும்பியதைப் பெற முடியாதபோது, நம்மிடம் உள்ளதை விரும்பிக் கொள்வதே மேல்.

95. உரையாடுவது அறிவின் பரிவர்த்தனை. தர்க்கஞ் செய்வது அறியாமையின் பரிவர்த்தனை.

96. நல்ல வழியில் செல்லும் மனம்தான் எமக்கு நல்ல நண்பன்.

97. ஒருவன் தெரியாமற் செய்த பிழைக்கு நாம் அநுதாபங்காட்டுதல் வேண்டும்.

98. செல்வம் உண்மையில் சிறந்த பொருளாயின் அது அயோக்கியரிடமும் இருக்கமாட்டாது.

99. குழந்தை இயல்புள்ளவர் எளிதில் மகிழ்வர். அவர்கள் பிறர்க்கு எக்காலத்திலும் மகிழ்வூட்டுவர்.

100. வாழ்க்கையில் உண்டாகும் துயரங்களைப் போக்கி அமைதி பெறுவதற்குப் பிரார்த்தனையே சிறந்தவழி.

முற்றுபெறும்:

## அடுக்குமொழி

திருட்டுப் புரட்டு
திருவும் கல்வியும்
தில்லு முல்லு
திறனும் தகுதியும்
தீரத் தெளிய
துக்கம் வெட்கம்
துடித்துப் பதைத்து
துடுக்கு மிடுக்கு
துண்டு துணுக்கு
தும்பு துரும்பு
துணி மணி
தும்பு தூசி
துயரமும் துக்கமும்
துவைத்து மிதித்து
துள்ளித் துடித்து
துன்பமும் துயரமும்
தூசியும் புழுதியும்
தூசு தும்பட்டம்
தூண்டி துருவி
தூபம் தீபம்
தூய்மை துப்புரவு
தூற்றலும் தும்மலும்
தெட்டத் தெளிய
தெள்ளத் தெளிய
தெள்ளிக் கொழித்து

## உங்களுக்குத் தெரியுமா?

### இலங்கையில் எப்போது ஆரம்பமானது?

| | | |
|---|---|---|
| 1. | இலவசக் கல்வி | 1-10-1945 |
| 2. | விவாகப் பதிவு | 19-10-1847 |
| 3. | றேயல் கல்லூரி ஆரம்பம் | 26-10-1836 |
| 4. | பொலிஸ் நீதிமன்றங்கள் | 13- 7-1844 |
| 5. | கொழும்பு - காலி தந்தித்தொடர்பு | 1- 1-1858 |
| 6. | கொழும்பு - கண்டி புகையிரதம் | 26- 4-1867 |
| 7. | வைத்திய கல்லூரி ஆரம்பம் | 1- 6-1870 |
| 8. | சுயஸ் வழியாக முதல் கப்பல் | 10- 2-1870 |
| 9. | குடிசன மதிப்பு | 27- 3-1871 |
| 10. | ரூபா சதம் பழக்கம் | 1- 1-1872 |
| 11. | காஸ் லைட் | 5- 8-1872 |
| 12. | கொழும்பு நூதனசாலை ஆரம்பம் | 1- 1-1877 |
| 13. | வெள்ளி நாணயம் பழக்கம் | 1-10-1892 |
| 14. | இந்தியா இலங்கை பொதுநேரம் | 1- 7-1905 |
| 15. | ஆகாய விமானந் தென்பட்டது | 26-12-1911 |
| 16. | ஒலிபரப்பு ஆரம்பம் | 27- 6-1924 |
| 17. | கொழும்பு நூல்நிலையம் | 10- 8-1925 |
| 18. | டொனமூர் அரசியற்குழு | 21-11-1927 |
| 19. | சட்டசபைக் கட்டத்திறப்புவிழா | 29- 1-1930 |
| 20. | காந்தி இலங்கைக்கு வருகை | 12-11-1927 |

★ பேரும் புகழும் ஒழுக்கத்துக்கு நிகராகமாட்டா ★

### ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவர்:

# பரீட்சகர் ஒருவர்

தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையர் உரையைத் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்ட காலத்தில் தமது பதிப்புரையில், எழுதிய வாசகத்தின் ஒரு பகுதி வருமாறு:

''யாம் அச்சிடுகையில் உரைக்கண் மேற்கோள்கள் பல இன்னவிடத்தனவென விளக்கியும், சில திருத்தங்கள் செய்துமுபகரித்த காலஞ்சென்ற திருவாளர் தி. த. கனகசுந்தரம்பிள்ளை அவர்கட்கு என்றும் மறவா நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

திருக்கோணமலைத் தம்பிமுத்துப்பிள்ளை கனகசுந்தரம் பிள்ளை 9-9-1863இல் பிறந்தார். அவர் இளமையில் திருக்கோணமலைக் கணேச பண்டிதரிடம் கல்வி கற்றபின் அவ்வூர்க் கதிரைவேற்பிள்ளை அவர்களிடம் பாடங்கேட்டுப் பல நூல்களைக் கற்றுப் பதினான்காம் வயதுப் பராயத்திலேயே புராணங்களுக்குப் பயன்சொல்லும் பயிற்சியையும் பெற்றிருந்தார் என்பர்.


கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழ் நாட்டில் உள்ள செங்கல்வராயன் உயர்நிலைப் பள்ளியிற் சேர்ந்து படித்தார். அங்கே திறமையான மாணவன் என ஆசிரியர் பலருடைய நன்மதிப்பைப் பெற்றார். பின்னர் பச்சையப்பாக் கல்லூரியிற் சேர்ந்து பட்டதாரி முதல் வகுப்பான எவ். ஏ. பரீட்சையில் திறமையுடன் சித்திபெற்றார். அதன்பின் இராசதானிக் கல்லூரியிற் சேர்ந்து பட்டதாரிப் பரீட்சையிற் சித்திபெற்றார். அப்பரீட்சையில் தமிழிலும், தத்துவ சாத்திரத்திலும் விசேட சித்திபெற்ற பிள்ளையவர்களின் பெயர் தமிழ்நாட்டிற் பிரபலிக்கமுறுவதாயிற்று.

பிள்ளையவர்களின் அறிவாற்றலை அறிந்த சென்னை அரசாங்கத்தார் அவருக்கு மதிப்பான மேல் உத்தியோகத்தைக் கொடுத்தனர். ஆனால் மொழித் தொண்டு செய்யும் ஆர்வம் படைத்த பிள்ளையவருக்கு அரசவுத்தியோகம் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அரசாங்க உத்தியோகத்தை வெறுத்த அவர் பச்சையப்பன் கலாசாலையிலே பேராசிரியராயமர்ந்தார். பாடஞ் சொல்லுவதில் பேராற்றல் படைத்த பிள்ளையவர்களின் மாணவருள், பேராசிரியர் கந்தசாமி முதலியார், மணி திருநாவுக்கரசு முதலியார், பண்டிதர் சுப்பிரமணிய சிவா, பண்டிதர் எதிராஜலு நாயுடு முதலானவர் குறிப்பிடத்தக்கவர்கள். மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளையவர்களும் கனகசுந்தரம்பிள்ளையவர்களிடம் தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியங்களையும் முறையாகக் கற்றுத் தேர்ந்தனர் என்பர்.

பேராசிரியர் கனகசுந்தரம்பிள்ளையவர்கள் பச்சையப்பன் கலாசாலையைவிட்டுச் சென்னைச் சர்வகலாசாலையிலும், கிறித்தவ கலாசாலையிலும், பேராசிரியராயமர்ந்தார்கள். அவருடைய பெருமை தமிழ் நாடெங்கும் பரவியது. பேராசிரியராயிருந்த காலத்தில் அவருக்கு மொழித் தொண்டு செய்வதற்கும் போதிய வசதியும் வாய்ப்புங் கிடைத்தன.

தமது ஓய்வுநேரங்களில் பழந்தமிழ் நூல்களையும் வடமொழி நூல்களையும் ஆராய்ந்து கொள்வதையே பொழுதுபோக்காகக் கொண்டார். தொல்காப்பியம், நற்றிணை, நம்பியகப்பொருள், இராமாயணம், தமிழ் நாவலர் சரிதை முதலான நூல்களின் ஏட்டுப் பிரதிகள் பலவற்றைத் தேடியெடுத்து ஒப்புநோக்கி ஆராய்ந்தார். தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரத்துக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையையும், சொல்லதிகாரத்துக்குச் சேனாவரையர் எழுதிய உரையையும் நன்கு பரிசோதித்துத் திருநெல்வேலிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரிடம் கொடுத்தார். அங்ஙனமே பின்னத்தூர் நாராயணசாமி ஐயரவர்களின் நற்றிணைப் பதிப்பையும் பிள்ளையவர்களே பரிசோதித்துக்கொடுத்தார் என்பர்.

(அடுத்த இதழில் முடிவடையும்



## திரு  மணம்

மில்க்வைற் தொழிலகத்தில் விளம்பரப் பலகை எழுதுதல், சித்திரந் தீட்டுதல் முதலிய கலைப்பணியில் கடமையாற்றும் திரு. அ. பெரியதம்பி அவர்கள் பேச்சுப்புலன் அற்றவர். ஆனால் கடமையில் கண்ணும் கருத்தும் உள்ளவர். அவர் தம்மைப்போலப் புலன் வசதியற்ற கலையார்வமுள்ள நவமோகினி என்னும் பெண்ணைச் சென்ற 8-9-79ல் திருமணம் செய்துள்ளார். அவரைப்போன்ற புலன்வசதியற்ற நண்பர்கள் பலர் கூடித் திருமணவிழாவைச் சிறப்புடன் நடத்திவைத்தனர். அவர்கள் செய்த அலங்காரங்கள், ஒப்பனைகள் மிகவும் அருமையானவை. மணமக்களை மில்க்வைற் தம்பதிகள் மனமுவந்து வாழ்த்திப் பரிசுகள் கொடுத்து மகிழ்வித்தனர். வாழ்க கலைஞர் இருவரும்.

**உண்மை பேசத்தெரியாதவன் போலி நாணயம் போன்றவன்**

## ★ யோகாசனம் ★



### பச்சிமோத்தாஞசனம்

முதலில் மல்லாந்து படுத்த நிலையில் இரு கால்களையும் ஒன்ருகச் சேர்த்துவைக்கவும். பின்னர் இரு கைகளையும் தலைப்பக்கம் நீட்டிக் காதுகளுடன் ஒட்டியவாறு. சுவாசத்தை உள்ளிழுத்து, இடுப்புக்குமேல் உடலை எழுப்பிக் கால்களை நீட்டி உட்கார்ந்த நிலைக்குவரவும், பின்னர் கைவிரல்களால் கால் பெருவிரலைத் தொடுவதற்கு முயற்சி செய்யவும். தலையை மேலும் வளைத்து முழங்கால்களைத் தொடுவதற்கு முயற்சி செய்யவும். மூச்சை மெதுவாக வெளிவிடும் போது வயிற்றை மெதுவாக எக்கவும். இப்படியே தலையை உயர்த்தும்போது மூச்சை இழுப்பதும் குனியும்போது மெதுவாக வெளியே விடுவதும் பழக்கத்தில் வருதல் நன்று.

இதனையும் சர்வாங்காசனத்தையும் தொடர்ந்து செய்வதால் பெண்களுக்கு மாதவிடாய்த் தொந்தரவுகள் நீங்கும். மலட்டுத்தன்மை நீங்கும்.

பொதுவாக எவருக்கும் நீரிழிவு, வயிற்றுவலி, இடுப்புவலி, தலைவலி, மூலக்கடுப்பு முதலியன நீங்கும். பெருத்த சதைகள் கரைந்து இடுப்பும் வயிறும் இறுகும். குடல்கள், குண்டிக்காய், பித்தப்பை, இரைப்பை முதலியன உறுதியடையும். நன்ருக வேலைசெய்யும்.

இந்த அப்பியாசம் எவரும் செய்யக்கூடியது. இதனுல் நன்மையேயன்றித் தீமை உண்டாகாது.


## மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்தி தேவையானேர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீலசோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2,
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2,
சலவைப் பவுடர் மேலுறை 2

**மில்க்வைற் த.பெ.இல. 77, யாழ்ப்பாணம்.**



மில்க்வைற்

## மினி பார் சோப்

மில்க்வைற் தயாரிப்புகளில் பார் சோப்பைப் பலர் வெகுவாக விரும்புவது வழக்கம். ஆதரவாளர்கள் பலர் பார் சோப்பினை அளவாக வெட்டி உபயோகிப்பது வழக்கம். சிலர் கையடக்கமான சிறிய பார் சோப்பையே நீங்கள் தயாரித்து விநியோகித்தால் நல்லது என்று கேட்டார்கள். அவர்கள் விருப்பத்தின் வண்ணம்

**1-10-79** முதலாக

**மில்க்வைற் மினி பார் சோப்**

ஆதரவாளருக்குக் கிடைக்கும்.


தரத்திலும் தயாரிப்பிலும் குணத்திலும் இது

**பார் சோப்பை ஒத்தது.**

**விலை ரூபா 1-50**

உங்கள் உபயோகத்துக்கு
அளவானது, அடக்கமானது, சிக்கனமானது.

இதனை, யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்க நிர்வாக இயக்குனர்
**திரு. S. சிவஞானம் அவர்கள்**
நல்லவேளையில் கொள்முதல் செய்தார்கள்.

மில்கவைற் தொழிலதிபர் மரம்நாட்டு விழாவை ஆரம்பித்து வைக்கிருர்


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள் கௌரவ ஆசிரியர் க. சி. குலரத்தினம் 1-10-79.